# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை

## 2003-2004

தமிழ் நாடு அரசு அச்சுத்துறை இயக்குநரால் தமிழ்நாடு அரசுக்காக அச்சிடப் பெற்றது

# தமிழ்நாடுஅரசுப் பணியாளர் தேர்வாணையம்
# ஆண்டறிக்கை - 2003-2004

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
## ஆண்டறிக்கை 2003-2004
### பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | செயல்களும் கடமைகளும் | 2-4 |
| 2 | நேரடித் தேர்வுகள் | 4-5 |
| 3 | தகுதியும் பொருத்தமும் உடைய வேட்பாளர்கள் இல்லாமை | 6 |
| 4 | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல். ஒழுங்கு நடவடிக்கை முறையீடுகள் மனுக்கள் சட்ட முறை ஒழுங்கு முறை விதிகள். தற்காலிக நியமனங்கள் விதி தளர்த்தல் முதலியன | 6-9 |
| 5 | தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள் | 9 |
| 6 | அரசும் தேர்வாணையமும் | 10-19 |
| | பின் இணைப்புகள் | |
| 1 | தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல் | 21 |
| 2 | நேரடித் தேர்வு வெளியிடப்பட்ட முடிவுகள் புள்ளி விவரம் | 22 |
| 3 | வருவாய் மற்றும் செலவு | 23 |
| 4 | வெளியான அறிவிக்கை விளம்பரங்கள் | 24 |
| 5 | எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு விவரம் | 24-26 |
| 6 | பொருத்தமும் தகுதியும் உடைய வேட்பாளர்கள் இல்லாத பணிகள் குறித்த விவரம் | 27 |
| 7 | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பதவிகள் | 28-29 |
| 8 | ஒழுங்கு நடவடிக்கைகள், மனுக்கள் மற்றும் முறையீடுகள் விவரம் | 29-30 |
| 9 | தேர்வாணையத்தின் ஒழுங்கு முறை விதி 1954 விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் முறைப்படுத்தியதன் விவரம் | 31-32 |
| 10 | தற்காலிக நியமனங்கள் மாநிலப் பணி/சார்நிலைப் பணி/அமைச்சுப் பணிகள் 24 மாதங்களுக்கு மேல் இசைவு அளித்த விவரம் | 32 |
| 11 | அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கப்படாத நிகழ்வுகள் குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான புள்ளி விவரம் | 33 |
| 12 | வரைபடங்கள் | 34-35 |

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை 2003-2004

### முன்னுரை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசியலமைப்புப் பிரிவு 315-இன் படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் ஒருவர், உறுப்பினர் பதினொன்று என்பது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். தற்போது தலைவரும், நான்கு உறுப்பினர்களும் உள்ளனர்.

இவ்வாண்டிற்கான தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| திருமதி. யாஸ்மீன் அகமது, இ.ஆ.ப. (ஓய்வு) | தலைவர் |
| திரு. வ. அழகுசுந்தரம், எம்.எஸ்.ஸி., | உறுப்பினர். |
| டாக்டர். இரா. பெருமாள்சாமி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர். (திருமதி) கு. ம. இராமாத்தாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., | உறுப்பினர் |
| திரு. இரா. தமிழ்மணி, பி.ஏ.,பி.எல்., | உறுப்பினர் |
| | |
| டாக்டர் ஆர். பாஸ்கரன், இ.ஆ.ப.,<br>26.05.2003 ல் செயலராக பொறுப்பேற்றார். | செயலாளர் |
| திருமதி. சந்தியா வே. சர்மா, இ.ஆ.ப. | தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர் |

மார்ச் 31, 2004-இன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பின் இணைப்பு-1இல் கொடுக்கப்பட்டுள்ளது.

# பகுதி-1

**செயல்களும் கடமைகளும்:**

தேர்வாணையம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதன் விவரங்கள் இந்திய அரசியல் அமைப்புப் பிரிவு 320-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநிலப் பணிகளில் பணி நியமனம் பெற உரிய தேர்வுகளைத் தேர்வாணையம் நடத்த வேண்டும். மேலும் மாநில அரசு, தன் பணியாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும், பணி விதிகள் உருவாக்குதல் மற்றும் மாற்றம் செய்தல், ஒரு பதவிக்கு, பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், பணியாளர்களுக்கு பணிக்காலத்தில் ஏற்படும் செலவினம் மற்றும் தீங்குகளுக்கான இழப்பீடு வழங்குவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்தும் தேர்வாணையத்தினைக் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகின்றது. இந்திய அரசுப் பாதுகாப்புத்துறை சார்பாக டேராடூனில் உள்ள இந்தியப் பாதுகாப்புக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் சேருவதற்கான தேர்வையும் தேர்வாணையம் நடத்துகின்றது.

**வேலைப் பளு :**

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப்பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**I.** நேரடித் தேர்வு :

1. முதல் நிலைத் தேர்வு : - ஏதுமில்லை -

2. முதன்மை எழுத்துத் தேர்வு :

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 5 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 706 |
| **தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்** | : | 1,15,069 |

**3.** நேர்முகத் தேர்வு :-

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 9 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 1216 |
| தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | : | 1948 |

**4.** இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் :-

| | | |
|---|---|---|
| முடிவு செய்த தெரிவுகளின் எண்ணிக்கை | : | 8 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 1240 |
| தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | : | 1163 |

## II. இதர தேர்வு விவரங்கள்:

1. துறைத் தேர்வு

| | | மே 2003 | டிசம்பர் 2003 |
|---|---|---|---|
| விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | : | 37,680 | 33,271 |
| வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை | : | 12,676 | 9,644 |

2. அரையாண்டுத் தேர்வு

2003 ஆம் ஆண்டு செப்டம்பர் தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை : 66

2004 ம் ஆண்டு மார்ச் தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை : 66

3. கல்வித் தகுதி/வயது முதலியவற்றில் விதி தளர்த்தியது : 27 நேர்வுகள்.

4. பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல் : 324 நபர்கள்.

5. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல் - அமைச்சுப் பணியில் : 145 **நபர்கள்.**

6. ஒழுங்கு நடவடிக்கை -அரசுக்குத்தேர்வாணையம் தன் கருத்துகளை தெரிவித்த வழக்குகள் : 359 **நேர்வுகள்.**

7. ஒழுங்கு முறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனம் செய்யப்பட இசைவு அளிக்கப்பட்டவை. : 1015 **நேர்வுகள்.:**

8. வரவு மற்றும் செலவு (ரூபாய் ஆயிரங்களில்)

| | |
|---|---|
| வரவு | 1,03,04 |
| செலவு | 8,22,11 |

வரவு மற்றும் செலவின விவரங்கள் பின் இணைப்பு -3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

9. அறிவிக்கைகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தில் பல்வேறு பணிகளில் 5 பதவிகளுக்கான காலியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி 5 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. அப்பதவிகளின் காலியிடங்களின் எண்ணிக்கை 677, விண்ணப்பித்தவர்கள் 32,475 ஆகும். வெளியிடப்பட்ட 5 பதவிகளுக்கான அறிவிக்கைப் பட்டியல், 677 காலியிடங்களின் எண்ணிக்கையுடன் உள்ள விவரங்கள் பின் இணைப்பு - 4 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பு:- மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை விளக்கும் வரைபடங்கள் பின் இணைப்பு -12ல் கொடுக்கப்பட்டுள்ளன

10. சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள் :

மற்ற ஒத்த பணியமைப்பு உடைய நிறுவனங்களில் ஏற்படும் முன்னேற்றங்களையும், தேர்வு முறைகளில் ஏற்படும் மாற்றங்களையும் இத் தேர்வாணையம் அவ்வப்பொழுது ஆராய்ந்து தனது தெரிவு முறைகளில் உரிய மாற்றங்களை செய்து வருகிறது.

1) தொகுதி பணிகள் மற்றும் சில தொழில்நுட்பப்பணிகளின் தெரிவிற்கு பல்வகை பதவிகள் ஒரே தெரிவில் உள்ளன. தற்சமயம் இப்பணிகளின் தெரிவிற்கு விண்ணப்பதாரர்கள் தெரிவிக்கும் விருப்பத்தின் பேரில், பதவிகளின் முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கு பதவி ஒதுக்கீடு செய்யப்படுகிறது இதற்கு பதிலாக தேர்வாணையம் இப்பணிகளுக்கு விண்ணப்பதாரர்களை இறுதி தெரிவிற்கு நேரடியாக அழைத்து, கலந்தாய்வு செய்து விண்ணப்பதாரர்களின் கருத்துரையின் அடிப்படையில் சரியான நபருக்கு சரியான பதவியை அளிக்க முடியும் என முடிவு மேற்க்கொண்டுள்ளது. இதனால் தெரிவு பெற்றவர்கள் பணியில் சேராமல் ஏற்படும் காலியிடப்பணிகள் உருவாகாமல் தவிர்க்கப்படும்.

2) தேர்வாணையத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் இனி நேரடியாக தகவல் தொடர்பு சாதனமான இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதனால் விண்ணப்பதாரர்கள் தாமதம் இன்றி விண்ணப்பிக்கலாம். தபால் மூலம் ஏற்படும் காலதாமதத்தையும் தவிர்க்க முடியும்.

## பகுதி-2

நேரடித் தெரிவுகள்:

அறிக்கைக்குரிய ஆண்டில் 706 காலியிடங்களுக்கான 5 தெரிவுகளில் முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. 1,15,069 விண்ணப்பதாரர்கள் முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். 1216 காலியிடங்கள் அடங்கிய 9 தெரிவிற்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. 1948 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். தேர்வாணையம் இறுதியாக 8 தெரிவுகளுக்கு முடிவினை அறிவித்தது. 1240 காலியிடங்களுக்கு இறுதியாக 1163 விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தது இறுதி முடிவு செய்த 8 தெரிவுகளின் புள்ளி விவரம் பின் இணைப்பு - 2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கைக்குரிய ஆண்டில் தெரிவு முடிக்கப்பட்ட சில முக்கியப் பதவிகளின் விவரம்

| வரிசை எண் (1) | பதவியின் பெயர் (2) | காலியிடங்களின் எண்ணிக்கை (3) | தெரிவு செய்யப்பட்ட நபர்கள் (4) |
|---|---|---|---|
| 1 | உரிமையியல் நீதிபதி | 110 | 108 |
| 2 | உதவி அறுவை மருத்துவர் (சிறப்புத் தகுதி தேர்வு) | 516 | 516 |
| 3 | உதவி அறுவை மருத்துவர் (பொது மற்றும் சிறப்பு) | 504 | 434 |
| 4 | தொகுதி - VIII பணிகள் | 76 | 76 |
| 5 | நகராட்சி ஆணையர் நிலை - II | 24 | 21 |

# தொகுதிப் பணிகள்

## தொகுதி ஒன்று பணிகள்

(அ) தேர்வாணையம் தொகுதி ஒன்று பணியில் 99 காலியிடங்களுக்கு 27-12-2000 அன்று விளம்பரப்படுத்தியது. 1,06,650 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதனிலைத் தேர்வு 10.06.2001 அன்று நடைபெற்றது. முதன்மைத் தேர்வு 09.02.2002 முதல் 13.03.2002 வரை நடைபெற்றது.

## ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் - I :

(அ) தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் - I ல் 24 காலியிடங்களை நிரப்ப 14.11.2002 அன்று விளம்பரப்படுத்தியது. அதற்கு 36,171 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதன்மைத் தேர்வு 01.03.2003 முதல் 02.03.2003 வரை நடைபெற்றது. 21.08.2003 அன்று வாய்மொழித் தேர்வு நடைபெற்றது. இறுதியாக 21 விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## தொகுதி - **VIII** பணிகள்:

(அ) தேர்வாணையம் தொகுதி-**VIII** பணியில் 76 காலியிடங்களை நிரப்ப 22-11-2002 அன்று விளம்பரப்படுத்தியது. அதற்கு 93,899 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதன்மைத் தேர்வு 12.04.2003 முதல் 13.04.2003 வரை நடைபெற்றது. 15.10.2003 மற்றும் 16.10.2003 அன்று வாய்மொழித் தேர்வு நடைபெற்றது. இறுதியாக 76 விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## முதன்மை எழுத்துத் தேர்வுகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 706 காலியிடங்களை நிரப்புவதற்கு 5 முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 1,15,069 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

## வாய்மொழித் தேர்வுகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வேறு பதவிகளில் 1216 காலியிடங்களை நிரப்ப 9 பதவிகளுக்கு வாய்மொழித் தேர்வுகள் நடத்தப்பட்டன. நடப்பு ஆண்டில் 31 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. நேர்முகத் தேர்வுகள் முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடந்தன சில நாட்களில் அதிகபட்சமான 5 குழுமங்கள் முற்பகலும் மற்றும் பிற்பகலும் இயங்கின. மொத்தம் 246 நேர்முக அமர்வுகள் நடத்தப்பட்டன. 1948 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அறிக்கைக்குரிய ஆண்டில் நடந்த முதல்நிலை, முதன்மை எழுத்துத் தேர்வுகள் மற்றும் வாய் மொழித் தேர்வின் விவரங்கள் பின் இணைப்பு -5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

# பகுதி-3

## தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாதப் பதவிகள்:

அறிக்கைக்குரிய ஆண்டில் 77 காலியிடங்களுக்குத் தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையால் அவை நிரப்பப்படவில்லை.

| வ.எண் | பதவியின் பெயர் | ஆதி | பழ | மிபிவ. | பிவ | பொ.போ | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | உரிமையியல் நீதிபதி தமிழ்நாடு மாநில நீதிப்பணி | - | 2 | - | - | - | 2 |
| 2. | நகராட்சி ஆணையர் நிலை-II | 3 | | - | - | - | 3 |
| 3. | உதவி அறுவை மருத்துவர் (சிறப்புப் பிரிவு) | 14 | - | 25 | 29 | 2 | 70 |
| 4. | உதவிப் பேராசிரியர் மருத்துவ உளவியல் | 2 | | - | - | - | 2 |
| கூடுதல் | | 19 | 2 | 25 | 29 | 2 | 77 |

இதன் விவரம் பின் இணைப்பு - 6 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

# பகுதி - 4

## பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவு செய்தல். ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள், தற்காலிக நியமனங்கள் முதலியன.

1. பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவு செய்தல் :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலப் பணிகளில் தொடர்புடைய சார் நிலைப் பணிகளிலிருந்து பணி மாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் 13 பணிகளில் 324 தகுதியும், பொருத்தமும் உடைய நபர்களைத் தெரிவு செய்தது. இதன் விவரம் பின் இணைப்பு-7ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள் முதலியன :

அ. I. செயல்நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள் (சென்ற ஆண்டு ஏப்ரல் திங்கள் 2003-ல் நிலுவையில் இருந்த 124 வழக்குகள் உட்பட) — 932

II. (i) தேர்வாணையம் கருத்துத் தெரிவித்த வழக்குகள் — 415

(ii) தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள் — 76

(iii) உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பியது, — 64

(iv) சில ஆவணங்கள் அல்லது விவரங்கள் அரசிடம் கேட்கப்பட்ட வழக்குகள் — 377

III. வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்ட வழக்குகள் — 63

ஆ. I) அரசுக்குத் தேர்வாணையத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட வழக்குகள் 359

II) அவற்றில் அரசு நடவடிக்கை எடுத்து ஆணைப்பிறப்பித்த வழக்குகள் 159

III) அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள் 200

இ. ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் காலச் செலவழிவு

| | | | |
|---|---|---|---|
| 1) | மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 159 | |
| | | மாதம் | நாட்கள் |
| 2) | குற்றச்சாட்டுக்குறிப்பாணை அனுப்பிய நாளில் இருந்து தேர்வாணையத்திற்கு அதன் கருத்தைக்கோர அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 10 | 01 |
| 3) | தேர்வாணையம் அரசுக்கு தனது கருத்தைத் தெரிவிக்க எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 03 | 00 |
| 4) | தேர்வாணையம் தனது கருத்தினை அனுப்பிய பிறகு ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 07 | 00 |
| | எடுத்துக் கொண்ட(கொள்ளப்பட்ட) மொத்த சராசரிக் காலம் | 20 | 01 |

மேல்முறையீட்டு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு ஆகியவைகளில் அலுவலர்கள் தமது நேர்மைக்குப் புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள்கொண்ட வழக்குகள் என 359 வழக்குகளின் விவரம் பின் இணைப்பு -8ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 3. சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவுக் கேட்கப்பட்டு 1015 நிகழ்வுகளில் மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. எந்த நிகழ்விலும் தேர்வாணையம் தன் இசைவினை மறுக்கவில்லை.

| வரிசை எண் (1) | பணி வகை (2) | இசைவு அளிக்கப்பட்டவை (3) | இசைவு மறுக்கப்பட்டவை (4) |
|---|---|---|---|
| 1. | மாநிலப் பணி | 13 | - |
| 2. | சார்நிலைப் பணி | 03 | - |
| 3 | அமைச்சுப்பணி | 999 | - |
| | கூடுதல் | 1015 | - |

எப்பணிகளில் எந்தெந்தப் பதவிக்கு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் பின் இணைப்பு -9ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**4. தற்காலிக நியமனங்கள்:**

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாநிலத்தின் பல்வகைப் பணிகளில் பல்வகைப் பதவிகளுக்கு ஒரு நபரை தற்காலிகமாக நியமனம் செய்து அந்நியமனங்கள் 24 மாதங்கள் வரை தொடர்வதற்குத் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்டுள்ளது. ஒரு நபரின் நியமனம் 24 மாதங்களுக்கும் மேல் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது.

| | இசைவு அளிக்கப்பட்டது | | இசைவு மறுக்கப்பட்டது | |
|---|---|---|---|---|
| காலம் (1) | மாநிலப் பணிகள் (2) | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (3) | மாநிலப் பணிகள் (4) | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (5) |
| 3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள் | - | - | - | - |
| 12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள் | - | - | - | - |
| 18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள் | - | 1 | - | - |
| 24 மாதங்களுக்கு மேல் | - | 1 | - | - |
| கூடுதல் | - | 2 | - | - |

24 மாதங்களுக்கு மேலும் தற்காலிக நியமனம் தொடரத் தேர்வாணையம் ஒரு நேர்வில் இசைவு அளித்தமை குறித்த விவரம் பின் இணைப்பு - 10-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**5. விதி 20 (எ) (3)-ன் படி இசைவு அளிக்கப்பட்டவை:**

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20 (எ) (3)-ன் படி அமைச்சுப் பணியில் மாநிலத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்கு தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 145 ஆகும். எந்த நேர்விலும் இசைவு மறுக்கப்படவில்லை.

**6. விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல் :**

அரசால் 67 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன 59 நேர்வுகளில் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது. 8 நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்து கேட்டறியப்படவில்லை. அவை தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்கு உட்படாதவையாகவோ அல்லது இந்திய

அரசியல் அமைப்பு 320 (3)-ன் படி தேர்வாணையத்தினைக் கலந்தறியத் தேவையில்லாதவையாகவோ அமைந்துள்ளன.

7. விதி தளர்த்துதல்:

அறிக்கைக்குரிய ஆண்டில் 27 நேர்வுகளில் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டன. எந்த நேர்விலும் ஓய்வூதிய விதிகளைத் தளர்த்தி ஆணையிடப்படவில்லை அடிப்படை விதிகள், தமிழ்நாடு சிறப்பு ஊதியப்படி விதிகள் மற்றும் பயணப்படி விதிகள் ஆகியவற்றில் எந்த நேர்விலும் விதியைத் தளர்த்தி ஆணையிடப்படவில்லை. மேலும் எந்த நேர்விலும் மதராஸ் பொது வருங்கால வைப்புநிதி விதிகளைத்தளர்த்தி ஆணையிடவில்லை.

## பகுதி - 5

## தெரிவுத் தேர்வுகள் தவிர இதரத் தேர்வுகள்

1) துறைத் தேர்வுகள் :

2003-ஆம் ஆண்டு மே மற்றும் டிசம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 241 பாடங்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன. அத்தேர்வுகளுக்கு 70,951 நபர்கள் விண்ணப்பித்தனர்.

| வ எண். | விவரம் | மே - 2003 | டிசம்பர்-2003 |
|---|---|---|---|
| 1. | மொத்தப் பாடங்கள் | 125 | 116 |
| 2. | தேர்வுத் தாட்களின் எண்ணிக்கை | 163 | 152 |
| 3 | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | 37,680 | 33,271 |
| 4 | தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | 28,363 | 23,149 |
| 5 | தேர்ச்சிப் பெற்றவர்களின் எண்ணிக்கை | 12,676 | 9,644 |
| 6 | தேர்ச்சி சதவீதம் | 36 | 38 |

2) அரையாண்டுத் தேர்வுகள்:

உதவி ஆட்சியாளர், துணைஆட்சியாளர், காவல் துறை அலுவலர் மற்றும் வனத்துறை அலுவலர் ஆகியோருக்கான அரையாண்டுத் தேர்வு மற்றும் முதல்நிலைத் தமிழ் மொழித் தேர்வு செப்டம்பர் 2003 மற்றும் மார்ச் 2004 -ல் நடத்தப்பட்டன. இவற்றில் முறையே 66, 66 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

3) சிறப்புத் தமிழ்த் தேர்வு:

தமிழைத் தாய்மொழியாக பெறாத அகில இந்தியப் பணியைச் சேர்ந்த அலுவலர்களுக்கான சிறப்புத் தமிழ்த் தேர்வு செப்டம்பர்-2003-ல் விளம்பரப்படுத்தப்பட்டது. அதற்கு ஒருவரும் விண்ணப்பிக்கவில்லை.

4) டேராடூன் இந்தியப் பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளியில் சேருவதற்கான தேர்வை இத்தேர்வாணையம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக ஆகஸ்டு 2003 மற்றும் பிப்ரவரி 2004-ல் நடத்தியது. அதில் 201 மற்றும் 193 மாணவர்கள் முறையே கலந்துகொண்டனர்.

# பகுதி - 6

## அரசும் தேர்வாணையமும்

அ. தேர்வாணையக் கருத்தை அரசு ஏற்காமை:

அறிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து 9 வழக்குகளில் மாறுபட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:-

வழக்கு - 1

(அரசாணை 3(D) நிலை எண். 52, உள்துறை, நாள் 7.3.2003)

கடலூர் மாவட்ட முன்னாள் கூடுதல் காவல் துறைக் கண்காணிப்பாளரான திரு. கே. பிரேம் குமார் என்பவருக்கு நெய்வேலி என்.எல்.சி. ஊழியர்களின் போராட்டத்திற்கு எதிராக முறையாக நெறிமுறைகளைக் கடைபிடிக்காமலும் செயலாண்மை குற்றவியல் நீதிபதியை கலந்தாலோசிக்காமல் லத்தி சார்ஜ் செய்ததும் ஆகிய குற்றச்சாட்டுகளுக்காக வழங்கப்பட்ட 'கண்டனம்' என்னும் தண்டனையை எதிர்த்து அவர் அரசுக்கு அளித்த மேல்முறையீட்டின் மீது தேர்வாணையத்தின் கருத்தினை 2001-ஆம் வருடம் அரசு கோரியிருந்தது.

மேல்முறையீட்டாளரின் நேரத்திற்கு ஏற்ற பொருத்தமான நடவடிக்கையால் அரசுக்கு மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு நேரவிருந்த மிகப்பெரிய நெருக்கடி தவிர்க்கப்பட்டதாக கருதியதால், தேர்வாணையம், நடவடிக்கை எடுக்கப்பட்ட சூழலை கருத்தில் கொண்டு மேல்முறையீட்டை அனுமதிக்கவும் 'கண்டனம்' என்னும் தண்டனையை ரத்து செய்யவும் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்துக்கு மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது. மேல்முறையீட்டாளர் கடமை தவறியதற்கு போதிய சரியான நிறுவுகைகள் இருப்பதால் தேர்வாணைய கருத்திலிருந்து மாறுபட்டு 'கண்டனம்' என்னும் தண்டனையை உறுதி செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

தேர்வாணையம் வழக்கின் தன்மையையும் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை அனுமதித்து தண்டனையை ரத்து செய்யுமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

வழக்கு - 2

(அரசாணை (2டி) எண் 17, வணிகவரித் துறை நாள் 6.2.2003)

அரசு ஜூன் 2000ல் திரு ஏ.மனோகரன், வணிகவரி அலுவலர் 1992-93 ஆம் ஆண்டிற்கான 'ஜோதி கெமிக்கல்ஸ்' எனும் கம்பெனியின் கணக்குகளை முடிக்கும் போது ஏற்பட்ட தவறுதல்களுக்காக அன்னாரது ஊதிய உயர்வினை இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்த ஆணையை எதிர்த்து அளித்த மேல் முறையீட்டின் மீது தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. இந்த தவறு தணிக்கை மேலாளரின் ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டு தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(அ)ன் கீழ் காரணம் கேட்கும் குறிப்பாணை அனுப்பப்பட்டது. அவர் தனது விளக்கத்தினைச் சமர்ப்பிக்கவில்லை. பின்னர் அன்னாரது ஊதிய உயர்வு இரண்டாண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து

ஆணையிடப்பட்டது. இவ்வாணையை எதிர்த்து அளிக்கப்பட்ட மேல்முறையீட்டின் மீது தேர்வாணையம் பின்வருமாறு கருத்து தெரிவித்தது.

"மேல்முறையீட்டாளர் தனது பொறுப்புகளை தட்டிக் கழித்து தனது முறையான கடமைகளைப் புறக்கணித்து, கடமை ஈடுபாடு இல்லாமல், அரசின் சட்டப்படியான வருவாய் கஜானாவில் சேருவதற்கு எதிராக பணியாற்றியுள்ளார் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிருபிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு விற்பனை வரி சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள சட்டப்படியான பிரிவுகளையும் விதிகளையும் கடைபிடிக்காமல் தன்னிச்சையாக மேல்முறையீட்டாளர் நடந்து கொண்டுள்ளார் என்பது இதன் மூலம் தெரியவருகிறது. ஒரு பொறுப்பான வணிகவரி அலுவலர் மற்றும் மதிப்பீடு செய்யும் அலுவலர் என்ற எண்ணத்துடன் செயலாற்றாமல் தனக்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டு பணியினை உரிமை ஒப்படைப்புடனும் கடமை ஈடுபாடுடனும் செயலாற்ற தவறியதுடன் அரசு கஜானாவிற்கு சேர வேண்டிய சட்டப்படியான வருவாயை தனது அலுவல் சார்ந்த கடமைகளைப் புறக்கணித்ததின் மூலம் காப்புச் செய்ய தவறியிருப்பதன் வாயிலாக ஓர் அரசுப்பணியிலுள்ளவர் செய்யத்தகாததை செய்துள்ளதோடு 1973ம் ஆண்டின் தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகளில் விதி 20ஐயும் மீறியுள்ளார்".

"மதிப்பீடு பின்னர் திருத்தப்பட்டு 22.4.96ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு, கேட்புத் தொகை வசூலிக்கப்பட்டதால் அரசுக்கு இழப்பு ஏதும் ஏற்படவில்லை. இவ்வழக்கின் பொருண்மைகளையும் சூழ்நிலைகளையும் குறைபாடுகளின் கடுமையையும் கருத்தில் கொண்டு நோக்கும்போது, மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் என்னும் தண்டனையானது குற்றத்தின் தன்மைக்கு அதிகமானதாகவே தோன்றுகிறது. எனவே அளிக்கப்பட்ட தண்டனையை விடுப்புக்காலம் நீங்கலான ஓய்வூதியத்தைப் பாதிக்காத, திரண்ட பயனில்லாத ஓராண்டு ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையாகக் குறைப்பது நீதியின்பாற்பட்டதாக இருக்கும் என்று தேர்வாணையம் அரசுக்கு அறிவுரை வழங்கியது".

அரசு மீண்டும் தனது 20.8.2001 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட காரணத்திற்காக தேர்வாணையத்தின் திருந்திய கருத்துக்களை கோரியது

"மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் தணிக்கையில்லையெனில் அரசு வருவாயை இழந்திருக்கும். எனவே குற்றச்சாட்டு நிருபிக்கப்படுகிறது. மேலும் தேர்வாணையமும் குற்றச்சாட்டு நிரூபணமாவதாகக் கருதுகிறது".

தேர்வாணையம் தனது முந்தைய கருத்தினையே மீண்டும் ஒருமுறை வலியுறுத்தி பின்வருமாறு தெரிவித்தது:-

"மதிப்பீடு பின்னர் திருத்தப்பட்டு 22.4.96ல் ஆணையிடப்பட்டு, கேட்புத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளதால்,அரசுக்கு இழப்பு ஏதும் இல்லை. வழக்கின் பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும், குறைபாடுகளின் கடுமையையும் கருத்தில் கொண்டு, தேர்வாணையம், இராண்டாண்டுகளுக்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் என்ற தண்டனையை ஓராண்டுக்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தமாகக் குறைக்கலாம் என்ற தனது முந்தைய கருத்தை மீண்டும் வலியுறுத்துகிறது".

எனினும் 6.2.2003 நாளிட்ட அரசாணையில் தேர்வாணையத்தின் கருத்துக்கு மாறுபட்டு மேல்முறையீட்டினை நிராகரித்து ஆணை பிறப்பித்து, மாறுபட்டமைக்கு அரசு பின்வரும் காரணங்களை கூறியுள்ளது.

"மாநிலக் கணக்காய்வு தலைவரின் தணிக்கையில்லை என்றால் அரசு வருவாயை இழந்திருக்கும். 6.10.97ல் மேல்முறையீட்டாளர் காரணம் கேட்கும் குறிப்பாணையைப் பெற்றுள்ளார். அவர் தனது விளக்கத்தை சமர்ப்பிக்கவில்லை. ஆனால் முதலில் திரும்பத் திரும்ப கால அவகாசம் வேண்டியுள்ளார். அதன் பிறகு கால அவகாச நீட்சியும் கோரவில்லை. தனது விளக்கத்தினையும் சமர்ப்பிக்கவில்லை. ஒரு பொறுப்பான வணிகவரி அலுவலராக, மதிப்பீட்டாளராக செயல்பட தவறியுள்ளார், தனக்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டு பணியினை உரிமை ஒப்படைப்புடனும் கடமை ஈடுபாடுடனும் செயலாற்ற தவறியதுடன் அரசு கஜானாவிற்கு சேர வேண்டிய சட்டப்பூர்வமான வருவாயை தனது அலுவல் சார்ந்த கடமைகளைப் புறக்கணித்ததின் மூலம் காப்பு செய்ய தவறியிருப்பதன் வாயிலாக ஓர் அரசுப் பணியிலுள்ளவர் செய்யத்தகாததை செய்துள்ளதோடு, 1973ம் ஆண்டின் தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகளில் விதி 20ஐயும் மீறியுள்ளார் எனவே தவறு தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அரசு, கவனமுடன் ஆய்வு செய்ததில் சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையர் மேல்முறையீட்டாளர் மீது விதித்த தண்டனை வீதப்படியற்ற கடுமையானதல்ல என்று கருதுகிறது. எனவே,அரசு தனிச் செயலாளர் மற்றும் வணிகவரி ஆணையர் அவர்கள் 21.9.99 நாளிட்ட தனது செயல்முறை ஆணைகளில் மேல்முறையீட்டாளர் மீது ஏற்கனவே விதித்த இரண்டாண்டுகளுக்கு ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் என்ற தண்டனையை உறுதி செய்ய முடிவு செய்துள்ளது. அவ்விதமே அரசு திரு. ஏ. மனோகரனின் மேல்முறையீட்டு மனு தகுதி சிறிதும் இல்லாதது என நிராகரிக்கிறது"

வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளைக் கருதி மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனையை விடுப்புக்காலம் நீங்கலான ஓய்வூதியத்தைப் பாதிக்காத திரண்ட பயனில்லாத ஓராண்டு ஊதிய உயர்வு நிறுத்தமாக குறைக்கலாம் என்று தேர்வாணையம் அரசுக்கு அறிவுரை அளித்தது. ஆனால் தேர்வாணையக் கருத்திற்கு மாறுபட்டு அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

வழக்கு - 3

(அரசாணை நிலை எண் 1256 உள் (சிறை-1) துறை நாள் 24.12.2002)

2001-ம் ஆண்டு மே மாதத்தில் அரசு உள் (சிறை.1) துறை. சென்னை மத்திய சிறையில், சிறைத் துறைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றியவருக்கு, சிறைத் துறைத் தலைவரால் வழங்கப்பட்ட ஓர் ஆண்டு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் எனும் தண்டனையை எதிர்த்து, அன்னார் அரசுக்கு செய்து கொண்ட மேல்முறையீட்டின் மீது பிறப்பிக்கப்பட வேண்டிய ஆணை குறித்து, தேர்வாணையத்தின் கருத்தினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறை விதி 18(1) (அ) ன் கீழ் கோரியது. இவ்வழக்கினை கூர்ந்தாய்வு செய்ததில், சென்னை மத்திய சிறையிலிருந்த காவேரி, த/பெ நாவன் என்கின்ற சிறைக் கைதி 25.10.2000 அன்று சிறையிலிருந்து தப்பி செல்லக் காரணமாக இருந்தமைக்காக, மத்திய சிறைத்துறை கண்காணிப்பாளருக்கு தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17 (அ) ன் கீழ் ஒரு காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டது. மேல்முறையீட்டாளர் தமது விளக்கத்தினை அளித்தார். அன்னாரின் விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாமையால், நிருபணமான குறைபாடுகளுக்காக, சிறைத் துறைத் தலைவர் அன்னாரது ஊதிய உயர்வினை ஓர் ஆண்டுக்குதிரண்ட பயனின்றி நிறுத்திவைத்து ஆணையிட்டார். அத்தண்டனையை எதிர்த்து அன்னார் அரசுக்கு மேல்முறையீடு செய்தார். அரசு அம்மேல்முறையீட்டின் மீது பிறப்பிக்கப்பட வேண்டிய ஆணை குறித்துத் தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

இவ்வழக்கினை சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் நன்கு ஆய்வு செய்த தேர்வாணையம், சிறையிலிருந்து தப்பிச் சென்ற கைதி, அன்றைய தினம் இரவே பிடிபட்ட காரணத்தால், செப்டம்பர் 2001-ல் தனியாளருக்கு வழங்கப்பட்ட ஓர் ஆண்டுக்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் என்கிற தண்டனைக்கு பதிலாக "கண்டனம்" எனும் தண்டனை வழங்குமாறு அரசுக்கு அறிவுரை வழங்கியது.

அரசு தனது ஆணை நிலை எண் 1256 உள் (சிறை-1) துறை, நாள் 24.12.2002 ன் மூலம் தேர்வாணைய கருத்திற்கு மாறுபட்டு மேல்முறையீட்டாளருக்கு சிறைத் துறைத் தலைவரால் ஏற்கனவே வழங்கப்பட்ட தண்டனையை உறுதி செய்து ஆணை வெளியிட்டுள்ளது.

வழக்கு - 4

(அரசாணை (3டி) எண் 82, (கடும் மந்தனம்) உள்துறை, நாள் 19.6.2003)

2002ம் ஆண்டு ஜூலை மாதத்தில், அரசு உள் (காவல் - அ) துறை, முன்னாள் மாவட்ட காவல் துறை துணைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றிய ஒருவருக்கு காவல் துறைத் தலைவரால் வழங்கப்பட்ட 'கண்டனம்' எனும் தண்டனையை எதிர்த்து அன்னார் அரசுக்கு செய்து கொண்ட மேல்முறையீட்டின் மீது பிறப்பிக்கப்படவேண்டிய ஆணை குறித்து, தேர்வாணையத்தின் கருத்தினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதி 18 (1) (அ) ன் கீழ் கோரியது. இவ்வழக்கினை கூர்ந்தாய்வு செய்ததில், அக்காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் பணியாற்றியபொழுது, அப்பணியில் காணப்பட்ட சில குறைபாடுகளுக்காக அன்னார் மீது தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(அ)-ன் கீழ் ஒரு காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டது. மேல்முறையீட்டாளர் தனது விளக்கத்தினை அளித்தார் அவ்விளக்கத்தினைப் பரிசீலித்த காவல் துறைத் தலைவர், அன்னாரின் விளக்கம் எற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாமையால் நிரூபணமான குற்றச்சாட்டிற்காக, அன்னாருக்கு "கண்டனம்" எனும் தண்டனை வழங்கி ஆணை பிறப்பித்தார் அத்தண்டனையை எதிர்த்து அன்னார் அரசுக்கு மேல்முறையீடு செய்தார், அம்மேல்முறையீட்டின் மீது பிறப்பிக்கப்படவேண்டிய ஆணை குறித்து அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

இவ்வழக்கினை சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் நன்கு ஆய்வு செய்த தேர்வாணையம், இந்நிகழ்வில் மேல்முறையீட்டாளர் மீது எந்த குற்றமும் காணமுடியவில்லை என்பதாலும் அவருக்கு 'கண்டனம்' எனும் தண்டனை வழங்கப்பட்டமைக்கு எவ்வித அடிப்படைக் காரணமுமில்லாமையாலும், தனியாளருக்கு வழங்கப்பட்ட 'கண்டனம்' எனும் தண்டனையை இரத்து செய்து அன்னாரின் மேல்முறையீட்டை அனுமதிக்குமாறு அரசுக்கு டிசம்பர் 2002-ல் அறிவுரை வழங்கியது.

ஆனால் அரசு தனது ஆணை (3டி) எண் 82, (கடும் மந்தனம்) உள்துறை, நாள் 19.6.2003-ன் மூலம் தேர்வாணைய கருத்திற்கு மாறுபட்டு, மேல்முறையீட்டாளருக்கு காவல் துறைத் தலைவரால் ஏற்கனவே வழங்கப்பட்ட, தண்டனையை உறுதி செய்து ஆணை வெளியிட்டுள்ளது.

வழக்கு - 5

(அரசாணை (நிலை) எண். 59. கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் (ஜி1) துறை, நாள் 15.01.2003).

(அரசாண (நிலை) எண். 60, கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் (ஜி1) துறை, நாள் 15 10.2003).

கிருஷ்ணகிரி அணை, ஊரக சிறு பட்டு நூற்ப்பாலையில் உதவி இயக்குநராக பணியாற்றிய திரு ஜி.எம் சிவராஜ் மற்றும் முன்னாள் உதவி ஆய்வாளர் திரு கே. இராமையா ஆகியோர் தணிக்கை ஆய்வு செய்தபோது பட்டுக்கூடுகள் இருப்பில் அதிக அளவு குறைவு காணப்பட்டதால் அரசுக்கு நிதியிழப்பு ஏற்பட்டதற்காகவும், பதிவேடுகள் சரியாகப் பராமரிக்காததற்காகவும், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவ்வொழுங்கு நடவடிக்கை மீது பிறபிக்கப்பட வேண்டிய ஆணை குறித்து அரசு, தேர்வாணையத்தின் கருத்தினை அக்டோபர் 2000-ல் கோரியிருந்தது.

இவ்வழக்கினை சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் நன்கு ஆய்வு செய்த தேர்வாணையம் (1) குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரான திரு. ஜி.எம். சிவராஜ், உதவி இயக்குநர் அவர்களால் அரசுக்கு ஏற்பட்ட மொத்த நிதி இழப்புத் தொகை ரூ.71,607/-ல் 10 சதவீதம் ரூ 7,160/- மட்டும் இவரது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யலாம், என்றும், இது தவிர இவரது ஊதிய உயர்வினை ஓராண்டு காலத்திற்கு மட்டும் திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்யலாம் என்றும் (ii) திரு. கே இராமையா, முன்னாள் உதவி ஆய்வாளர் அவர்களால் அரசுக்கு ஏற்பட்ட மொத்த நிதி இழப்புத் தொகை ரூ.71,847/-ல் 10 சதவீதம் ரூ.7,185/- மட்டும் இவரது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யலாம் என்றும் இது தவிர இவரது ஊதிய உயர்வினை ஓராண்டு காலத்திற்கு மட்டும் திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்யலாம் என்றும் அரசுக்கு ஆகஸ்ட் 2001-ல் ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்துக்கு மாறுபட்டு, குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்கள் பொறுப்புடன் தங்கள் பணிகளை மேற்கொள்ளாததினால் அரசுக்கு இழப்பீடாக ரூ.71,607/- ஏற்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது என்றும், எனவே, இதனை முழுமையாக வசூலிக்கும் வகையில் குற்றஞ்சாட்டப்பட்ட திரு. ஜி.எம் சிவராஜ், மற்றும் திரு. கே. இராமையா அவர்களிடமிருந்து தலா ரூ. 35,803/-ஐ வசூல் செய்யலாம் எனவும் இது தவிர நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக ஒவ்வொருவருக்கும் மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வினை நிறுத்தம் செய்யலாம் எனவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

வழக்கு - 6

(அரசாணை நிலை எண். 825 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 27.12 2002)

ஜூலை 2002-ல் அரசு, திரு. கே. மன்னார், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்னாள் நேர்முக உதவியாளருக்கு வழங்கப்பட்ட திரண்ட பயனின்றி ஓராண்டு கால ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை எதிர்த்து குற்ற அலுவலர் செய்த மேல்முறையீடு மீதான ஆவணங்களை அனுப்பி வைத்து தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

மேல் முறையீட்டாளர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்னாள் நேர்முக உதவியாளராக (சத்துணவு) பணி புரிந்தபோது அவரை திண்டுக்கல் மாவட்டத்திற்கு உதவி திட்ட அலுவலராக (வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்) மாற்றம் செய்யப்பட்ட அரசு உத்தரவினை உதாசீனம் செய்ததாகக் கூறி மேல் முறையீட்டாளரின் மீது தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு)

விதி 17 (அ)வின் கீழ் குற்றக் குறிப்பாணை வழங்கப்பட்டு ஊரக வளர்ச்சி இயக்குநர் சென்னை அவர்களால் அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுவதாக முடிவு செய்து அதற்குத் தண்டனையாக அவரது ஊதிய உயர்வினைத் திரண்ட பயனின்றி ஓராண்டு காலத்திற்கு நிறுத்தி வைத்து ஆணையிடப்பட்டது.

தேர்வாணையம் இப்பொருள் குறித்த தன் கருத்துக்களில் கீழ்வருமாறு தெரிவித்தது.:-

மேல் முறையீட்டாளர் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறும் நாள் 31.05.2003 அன்னாரின் அடுத்த ஊதிய உயர்வு நாள் 1.1.2003. இந்நிலையில் 31.1.2002 அன்று ஊரக வளர்ச்சி இயக்குநரால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை முழுமையாக செயல்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. மேலும் இத்தண்டனையானது மேல்முறையீட்டாளரின் ஓய்வூதியத்தை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது. தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் 17(அ) (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) -ன் இரண்டாவது காப்புரையின் (Proviso) படி விதி எண் 17 (அ)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வழங்கப்படும் தண்டனையானது குற்ற அலுவலரின் ஓய்வூதியத்தினை பாதிக்கும் வகையில் அமைந்தால் அத்தகைய ஒழுங்கு நடவடிக்கை தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் விதி 17(ஆ) (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு)-ல் கூறப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். அவ்வாறு இல்லாததால் இவ்வழக்கில் எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கை வழுவுள்ளதாகிறது. எனவே இவ்வழக்கில் ஊரக வளர்ச்சி இயக்குநரால் பிறப்பிக்கப்பட்டுள்ள தண்டனை ஆணையினை ரத்து செய்து வழுவேற்பட்டுள்ள நிலையிலிருந்து மீண்டும் புதிதாக ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளும்படி ஆலோசனையை அளித்தது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்துக்கு மாறுபட்டு நான்கு மாதத்திற்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை வழங்கி ஆணையிட்டுள்ளது. மேலும் இத்தண்டனை அவரது ஓய்வூதியத்தை பாதிக்காது எனவும் ஆணையிட்டுள்ளது.

தேர்வாணையம் வழக்கின் தன்மையையும் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு வழுவேற்பட்டுள்ள நிலையிலிருந்து மீண்டும் புதிதாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது. மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

<u>வழக்கு - 7</u>

(அரசாணை நிலை எண். 436/உயர்கல்வித்துறை, நாள். 5.12.2003)

அரசாணை நிலை எண்.68/கல்வித்துறை, நாள் 12.1.82 மற்றும் அரசாணை நிலை எண்.1748/கல்வித் துறை, நாள் 30.10.86. ஆகியவற்றின்படி தொழில் நுட்பக் கல்வித்துறையில் தற்காலிகமாகப் பணிபுரிந்து வரும் ஆசிரியர் பணியாளர்கள் அனைவரையும் நிரந்தரப்பணியில் அமர்த்திக்கொள்ள ஏதுவாக தேர்வாணையத்தால் சிறப்புத் தகுதித் தேர்வு நடத்தி நிரந்தரப் பணியில் அமர்த்திக்கொள்ள ஆணையிடப்பட்டது. அந்த அரசாணையின் தீர்வு நாளான 31.10.85 அன்று பணியில் பணிபுரிவோர்களை மட்டும் நிரந்தரப் பணியில் அமர்த்தி கொள்ளவும் ஆணையிடப்பட்டது.

அவ்வாறு சிறப்புத் தகுதித் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட 211 ஆசிரியர்களை, சிறப்புத் தகுதித் தேர்வு நடத்தாமல் தேர்வாணையத்தின் 1954-ஆம் ஆண்டு ஒழுங்குமுறை விதி 16(பி)-ன் பிற்பகுதியின்படி தேர்வாணைய இசைவு வழங்கப்பட்டு, அனைத்து ஆசிரியர்களும் நிரந்தரப்பணியில் அமர்த்தப்பட்டனர்..

இந்நிலையில் திருமதி. அ. ராஜலட்சுமி, உடற்கல்வி இயக்குநர், டாக்டர் தர்மாம்பாள் அரசினர் பாலிடெக்னிக், சென்னை என்பவர் அரசு நிர்ணயித்த தீர்வு நாளான 31.10.85– தீர்வுக்குப் பிறகு, அதாவது 1.7.86 அன்று தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டவர் எனவும், அவர் அனைத்துக் தகுதிகளையும் பெற்றுள்ளதால், மனுதாரரின் பணியினையும் மற்ற ஆசிரியர்களின் பணியினை நிரந்தரம் செய்து வரன்முறைப்படுத்தியது போலவே வரன்முறைப்படுத்த அரசு தேர்வாணையத்தின் இசைவினைக் கோரியது. மேலும் அரசு தொழில்நுட்பப் பயிலகங்களில் தற்காலிகமாக பணிபுரிபவர்களின் பணியினை வரன்முறைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்ட போது, மனுதாரரின் விண்ணப்பம் தவறுதலாக தேர்வாணையத்திற்கு அனுப்பாமல் விடுபட்டுப் போனது எனவும் அரசு தெரிவித்திருந்தது.

மனுதாரரின் கருத்துருவினைப் பரிசீலனை செய்தபோது, அரசாணை (நிலை) எண்.950/கல்வி/நாள் 2.7.86–ல் டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் காலியாக உள்ள உடற்பயிற்சி இயக்குநர் பதவியை தற்காலிக அடிப்படையில் நிரப்ப தொழிற்கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி அரசாணையில் தற்காலிக பதவியில் பணியமர்த்தி ஆணையிடுவதற்கு முன், அதாவது 2.7.86க்கு முன்னரே மனுதாரர் திருமதி. அ. ராஜலட்சுமி என்பரை உடற்கல்வி இயக்குநர் பதவியில் 1.7.86 அன்று பணியமர்த்தியதற்கு அரசின் கடித எண். 77972/ஜே2/86–2, 26.11.86 நாளிட்ட கடிதத்தில் அரசு பின்னேற்பு ஆணையினை வழங்கியுள்ளது தெரிய வந்தது

மேலும் மனுதாரர் திருமதி. அ. ராஜலட்சுமி, உடற்கல்வி இயக்குநர் தற்காலிகமாக 1.7.86 முதல் பணியமர்த்தப்பட்ட போதும், மனுதாரரின் தற்காலிகப் பணி நீடிப்பு செய்ய தேர்வாணையத்தின் 1954–ஆம் ஆண்டு ஒழுங்குமுறை விதி 17–ன்படி தேர்வாணையத்தின் இசைவும் பெறப்படவில்லை.

எனவே, டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக்., சென்னையில் உடற்கல்வி இய்கநுநர் பதவியில் 1.7.86 முதல் தற்காலிகமாக பணிபுரிந்துவரும் திருமதி. அ. ராஜலட்சுமி என்பவரின் தற்காலிகப் பணிநீடிப்பு செய்ய தேர்வாணைய இசைவு பெறப்படாததால், இம்முறையற்ற நியமனத்தை வரன்முறைப்படுத்த தேர்வாணையத்தின் 1954–ஆம் ஆண்டு ஒழுங்குமுறை விதி 16(பி)–ன் பிற்பகுதியின்படி இசைவு அளிக்க இயலாது என அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது.

திருமதி. அ. ராஜலட்சுமி, உடற்கல்வி இயக்குநர் அரசின் அனுமதியுடன் 1.7.86 முதல் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளதாலும், தற்காலிகப் பணி நீடிப்பிற்குத் தேர்வாணைய இசைவு பெறுவது நிர்வாகத்தின் பொறுப்பாகும் என்பதாலும், மனுதாரர் பணியில் சேர்ந்து 16 ஆண்டுகள் ஆன நிலையில் அவரைப் பணியிலிருந்து விடுவிப்பது உசிதமாக இராது என்பதாலும், இதனை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி., இந்நிகழ்வினை எந்த ஒரு நிகழ்விற்கும் முன் உதாரணமாக கருதக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் மனுதாரர் திருமதி. அ. ராஜலட்சுமி, உடற்கல்வி இயக்குநர் அவர்களின் தற்காலிகப் பணியினை 1.7.86 முதல் முறைப்படுத்தி அரசாணை (நிலை) எண்.436/உயர்கல்வித்துறை/ நாள். 5.12.03–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

வழக்கு - 8

(அரசாணை (டி) எண்.12. சுற்றுச் சூழல் (வனம் 9 ஆ) துறை, நாள் 13.1.2004)

அரசு, மே 2002-ஆம் ஆண்டு, திரு. பி. வெங்கட்டன், சரகர் (ஓய்வு) தர்மபுரி வனக்கோட்டம், பாலக்கோடு சரகம் என்பவரின் மீதான சரக பொறுப்புகளை பொறுப்பேற்ற சரகரிடம் ஒப்படைக்காதது மற்றும் சந்தனக் கட்டைகள் இருப்புக் குறைவு ஆகிய குற்றங்களுக்கான ஒழுங்கு நடவடிக்கை குறித்து தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியிருந்தது.

